
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 6 | ஆகஸ்ட் 1993 | இதழ் 8



வெளியிடுவோர் :

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 5-30—6-30...திருமறை ஆய்வு & கலந்துரையாடல்

வியாழன் : மாலை 7-15—8-30...வேத ஆய்வுவகுப்புகள்

வெள்ளி : மாலை 7-00—9-00...ஜெப ஆராதனை

## இதழின் உள்ளே


1. ஏன் ஒருவன் கிறிஸ்தவனாய் இருக்க வேண்டும்? 1
2. கர்த்தருடைய சபையை அடையாளம் காணுதல் 7
3. ''நான் தான் இதற்கு காரணம்'' 12
4. கிறிஸ்தவன் ஆவது எப்படி? 15
5. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் 18
6. தண்ணீர் ஞானஸ்நானம் எவ்வாறு நம்மை இரட்சிக்கிறது 24
7. தேவ வசனங்கள் 26
8. கிறிஸ்துவைப் பின்பற்றுவது எப்படி? 28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701, Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 6 AUGUST—1993 Issue 8

**ஆசிரியவுரை**

# ஏன் ஒருவன் கிறிஸ்தவனாய் இருக்க வேண்டும்?

'கிறிஸ்தவன்' என்ற இந்த தெய்வீகமான வார்த்தைக்கு, நாம் வாழும் இந்த உலகத்து மக்கள் சரியான அர்த்தம் கண்டு பிடித்துள்ளார்களா? என்று ஆராய்ந்தால், பதில், நிச்சயமாக ''இல்லை'' என்பது தான். கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவின் உபதேசங்களுக்கும் சற்றும் சம்பந்தமில்லாதவர்கள் எல்லாம் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லித் திரிகிறார்கள். மற்றவர்களும் இவர்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கிறார்கள். ஒருவன் கிறிஸ்தவனா? இல்லையா? என்று நிர்ணயிப்பதற்கு, உலக மக்களால் பயன்படுத்தப்படும் அளவுகோல் பரிசுத்த வேதாகமத்திற்கு நேர் விரோதமானது.

ஒருவன், கர்த்தராகிய கிறிஸ்துவை ஏதாவது ஒரு வகையில் நம்புகின்ற பெற்றோர்களுக்குப் பிறந்ததினால், பிறப்பை அடிப்படையாக வைத்து தன்னைக் கிறிஸ்தவன் என்று அழைத்துக் கொள்கிறான். வேறொருவன் தனக்கு சூட்டப்பட்டுள்ள பெயர் வேதாகமத்தில் உள்ள பெயராக இருப்பதால், பெயரை அடிப்படையாக வைத்து தன்னை கிறிஸ்தவன் என்று எண்ணிக்கொள்கிறான். மற்றொருவன் கிறிஸ்தவன் என்று சொல்வதில், கிடைக்கும் சில சரீர நன்மைகளுக்காக, தன்னைக் கிறிஸ்தவன் என்று சொல்லி அலைகிறான். இப்படி இன்னும் பல காரணங்களை

அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால், கிறிஸ்துவை ஏதாவது ஒரு வகையில் நம்புவது மட்டும், ஒருவன் தன்னைக் 'கிறிஸ்தவன்' என்ற உயரிய பதத்தால் அழைத்துக் கொள்ளப் போதுமானதா?

நினைத்ததற்கெல்லாம் நீதிமன்றத்தை நாடும் அமெரிக்க தேசத்தில், பல ஆண்டுகளுக்கு முன், 'யார் கிறிஸ்தவன்' என்ற விசித்திரமான வழக்கு ஒன்று விசாரணைக்கு வந்தது. இதோ, அதன் பின்னணி. தன்னுடைய வங்கிக் கணக்கில் 1 லட்சம் டாலர் வரை இருப்பு வைத்திருந்த ஒருவன், "கிறிஸ்தவனாயிருக்கிற எனது உறவினர்களுக்கு இந்தப் பணம் சொந்தம்" என்று தனது உயிலில் எழுதி வைத்துவிட்டு மரித்துப் போனான். பிரச்சினை மிகவும் சிக்கலாகி, உறவுகளில் யாரெல்லாம் கிறிஸ்தவர்கள் என்று தீர்மானிக்க நீதிமன்றம் செல்ல வேண்டியிருந்தது. இந்த நுட்பமான வழக்கை சில மாதங்கள் விசாரித்த நீதிபதி தனது தீர்ப்பை இவ்வாறு எழுதினார்: "கிறிஸ்தவன் என்பவன் கிட்டத்தட்ட எதைவேண்டுமானாலும் நம்புபவன் அல்லது எதையுமே நம்பாதவன்". பிறகு அந்தத் தொகையை ஒரு தர்ம ஸ்தாபனத்திற்கு கொடுக்கும்படியும் உத்திரவிட்டார். கிறிஸ்தவன் யார் என்பதற்கு உலக ஞானம் கொடுத்த விளக்கம் இது தான். இதில் விசனப்படவேண்டி விஷயம் யாதெனில், தன்னைக் கிறிஸ்தவர்களென்று நிரூபிக்க முயற்சித்தவர்களும் புதிய ஏற்பாட்டுக்குச் செல்லவில்லை. தீர்ப்பை எழுதிய நீதிபதியும் புதிய ஏற்பாட்டைத் தொடவில்லை. கிறிஸ்தவன் என்ற வார்த்தையைத் தாங்கியுள்ள, புதிய ஏற்பாட்டைத் தொடாமலேயே, நாடாமலேயே, 'யார் கிறிஸ்தவன்' என்பதை எப்படி நிரூபிக்கமுடியும்? கிறிஸ்துவைப் பற்றியும், கிறிஸ்தவனைப் பற்றியும் இந்த உலகத்தின் தடுமாற்றம் இன்றும் தொடரவே செய்கிறது

ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் ஏராளம். இப்பொழுது ஏன் ஒருவன் கிறிஸ்தவனாக இருக்கவேண்டும்? என்பதற்கான நான்கு காரணங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

## 1. பெருமைக்குரிய பெயரைத் தரித்துக்கொள்ள :

அப்போஸ்தலருடைய நடபடிகள் 11:26-ல் ".... முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு **கிறிஸ்தவர்கள்** என்ற பேர் வழங்கலாயிற்று" எனக் காண்கிறோம். அதற்குமுன் கிறிஸ்துவை பின்பற்றினவர்கள் சீஷர்கள், விசுவாசிகள். பரிசுத்தவான்கள், சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டனர். ஆக அப் 11:26-ல் சொல்லப்படும் 'கிறிஸ்தவர்கள்' என்ற பெயர் ஏதோ தற்செயலாக

கொடுக்கப்பட்ட பெயர் அல்ல. இந்த அற்புதமான பெயர், வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாகக் கொடுக்கப்பட்ட ஒன்று. "ஜாதிகள் உன் நீதியையும், சகல ராஜாக்களும் உன் மகிமையையும் காண்பார்கள். கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்" (ஏசா 62:2) எனச் சொல்லியிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். அந்தப்படியே கொர்நெலியுவும் மற்ற புற ஜாதிகளும் அவருடைய நீதியை அறிந்து ஏற்றுக்கொண்டபொழுது, **'கிறிஸ்தவர்கள்'** என்ற புது நாமம் தேவனால் வாக்குக்கொடுத்தபடியே கொடுக்கப்பட்டது. இந்த புதிய நாமத்தை, பெயரை பரிசுத்த ஆவியானவரும் அங்கீகரித்துள்ளார். "ஒருவன் **கிறிஸ்தவனாயிருப்பதினால்** பாடுபட்டால்.... தேவனை மகிமைப்படுத்தக் கடவன்" (I பேதுரு 4:16).

அப்போஸ்தலனாகிய பவுல், யூதமார்க்கத்தில் தேறினவனாய் இருந்த அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக, தனக்காக உத்திரவு சொல்லும் நிகழ்ச்சியை அப் 26ம் அதிகாரத்தில் காணலாம். யூதமார்க்கத்தில் ஒரு பேராசிரியராக இருந்த ராஜாவை தன்னுடைய வாதத்திறமையால் அப்படியே இழுத்து வந்து, தன்னுடைய நிலையை விளக்குவதோடல்லாமல், தான் ஏற்றுக்கொண்ட நீதியை ராஜாவும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஆசைப்படுகிறார் பவுல். அதாவது அகிரிப்பா, ஒரு யூதனாக மட்டுமல்ல. யூதமார்க்கத்தில் தேறின பேராசிரியராக மட்டுமல்ல, அவர் ஒரு ராஜாவாக மட்டுமல்ல, வேறொருவராகவும் மாறவேண்டுமென பவுல் விரும்புகிறார். அதை உணர்ந்து தான் அகிரிப்பா ராஜா பவுலைநோக்கி: நான் **கிறிஸ்தவனாகிறதற்கு** கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்" என்றார் (அப் 26:28)

ஆக 'கிறிஸ்தவன்' என்ற பெயர், தேவனால் வாக்குத்தத்தமாகக் கொடுக்கப்பட்ட ஒரு உன்னதமான நாமம். இந்தப் பெயரை பரிசுத்த ஆவியானவர் அங்கீகரித்துள்ளார். இந்த பெருமைக்குரிய பெயரைத் தரித்துக்கொள்ள நாம் கிறிஸ்தவர்களாக இருப்பது அவசியம்.

**2. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகெங்கும் பரப்புவதற்காக:**

"அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுபோய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு

கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் .... என்றார்'' (மத் 28:18-20) கிறிஸ்து ராஜா, உயிர்த்தெழுந்ததற்குப் பிறகு தன்னுடைய சீஷர்களுக்குக் கொடுத்த பிரதானக் கட்டளை இது. மாற்கு ஆசிரியரும் இதே கட்டளையை நமக்கு எழுதிக் கொடுத்துள்ளார். ''பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' என்றார் (மாற் 16:15).

ஆம், உலக முழுவதையும் தன்னுடைய சீஷர்களாக்கும்படியான மாபெரும் பணியை கிறிஸ்தவர்களிடம் தான் ஒப்படைத்துள்ளார். இது ஆலோசனையாகச் சொல்லப்படாமல் கட்டளையாகக் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் கவனிக்கவேண்டும். ஆனால் இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் இப்பணியை ஊழியர்கள்தான் செய்யவேண்டுமென மெத்தனமாக உள்ளனர். ஊழியம் செய்கிறவர்களுக்குக் காணிக்கை கொடுத்தாலே போதும், நமது கடன் முடிந்தது என எண்ணுகின்றனர்.

நமதாண்டவர் உயிர்த்தெழுந்த பிறகு மட்டுமல்ல, அதற்கு முன் ஊழியம் செய்துவந்த நாட்களிலும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார். சிறப்புமிக்க மலைப் பிரதேசத்தில், சீஷர்களைப் பார்த்து, ''நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்'' என்றும் (மத் 5:13), அடுத்த வசனத்தில், ''நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்'' என்றும் கூறியுள்ளார். ஆம், ஒரு கிறிஸ்தவன் குறுகிய வட்டத்துக்குள் வலம் வருபவனல்ல. அவன் உலகம் முழுவதின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் வசீகர சக்தி நிறைந்தவன். உப்பைப் பற்றிச் சொல்லி, **''உட்புறக் கிரியையைப்''** பற்றி சொல்கிற கிறிஸ்துவானவர், ஒளியைப் பற்றிப்பேசி, **''வெளிப் புறக் கிரியையும்''** அதிக முக்கியமானதே என வலியுறுத்துகிறார். அவர் ஒளியைப்பற்றிப் பேசியுள்ளபடியால், ஒளியானது செய்கின்ற, குறைந்த பட்சம் மூன்று வேலைகளைக் கிறிஸ்தவர்களாகிய நாம் செய்யவேண்டும் 1. ஒளியானது வெளிச்சம் கொடுக்கிறது (Light Illuminates). ஒளியானது தான் படுகின்ற எல்லாவற்றையும் ஒளியுறச் செய்யும் ஒரு விசேஷதன்மை உடையது. அதைப் போல கிறிஸ்தவர்களும், பாவத்திலே, பிசாசின் பிடியிலே, அநீதியிலே, கள்ள உபதேசத்திலே இருக்கிற மக்களுக்கு வெளிச்சம் கொடுக்க வேண்டும். 2. ஒளியானது வழி காட்டுகிறது (Light guides). பாவத்தின் இருளிலே வாழ்ந்து கொண்டுள்ள உலகத்தின் மக்களுக்கு வேத வசனங்களின் வெளிச்சத்தை, கிறிஸ்தவர்களாகிய நாம் காட்டி அவர்களை நீதியின்

பாதைக்கு அழைத்து வரவேண்டும். 3. ஒளியானது எச்சரிப்புக் கொடுக்கிறது (Light warns). ஆபத்தை தவிர்ப்பதற்குத் தான் சிகப்பு ஒளி காட்டப்படுகிறது. மனிதனே! பாவத்தில் நீ தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தால், உனது நித்தியத்தை நரகத்திலே கழிக்கவேண்டி வரும் என உலகத்து மக்களை எச்சரித்து இவ் விதமாக கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்பவேண்டும்.

### 3. ஒரு பெரும் சவாலைச் சந்திப்பதற்காக :

சவாலை ஏற்றுக்கொண்டவர்கள் தான் தலைசிறந்த மனிதர்களாக மதிக்கப்படுகிறார்கள். ஆம், கிறிஸ்தவமும், தன்னுடைய மக்கள் சவாலை ஏற்றுக்கொண்டு, மேலான வாழ்வுக்குப் பத்திரவான்களாக வாழவேண்டுமென்றே விரும்புகிறது. பவுலடியார், எபேசியருக்கு எழுதும் பொழுது, நம்மை நாம் வெறுத்து அவரிடத்தில் வரும்படியாகவே சொல்கிறார் (எபே 4 20-24). அவரே, ரோமாபுரியாருக்குச் சொல்லும் பொழுது, மனதைப் புதிதாக்கி, மறுரூபமாகுங்கள் என்கிறார் (ரோம 12:2)

ஒருவன், உலக மீட்பருடைய சீஷனாக, கிறிஸ்தவனாக வாழவேண்டுமெனில் அதற்குண்டான விலையைக் கொடுத்தே ஆக வேண்டும். "...ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, **தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு**, என்னைப் பின்பற்றக் கடவன்" (லூக் 9:23). "தகப்பனையாவது, தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது, மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. (மத் 10:37) மேற்சொன்ன வசனங்களின்படி வாழ்வது சவால் நிறைந்ததே. சந்தேகமில்லை. ஆனால் இந்தப் பெரும் சவாலை ஏற்று, அனுதினமும் அவருடைய மெய்ப் பிள்ளையாக வாழ்ந்து, வெற்றிகொள்கிறவர்களை, தேவன் தம்மிடமாகச் சேர்த்துக் கொண்டு வாடாத ஜீவ கிரீடத்தை தருவார் (II தீமுத் 4:8).

### 4. தேவனோடு நெருக்கமான உறவை அனுபவிக்க :

வேறு எதற்காகவும் ஒருவன் கிறிஸ்தவனாக மாறாவிட்டால் கூட, இந்த, ஒரே ஒரு காரணத்திற்காக ஒருவன் கிறிஸ்தவனாக இருக்கவேண்டியது அவசியம். நாம் தேவனுடைய பிள்ளையாக மாறும் பொழுது, அவருடைய மந்தையின் ஆடுகளாகிறோம். (யோவா 10) அவர் நம்முடைய மேய்ப்பராகிறார். தேவன் நம்முடைய மேய்ப்பராகும் பொழுது நமக்கு ஒரு குறைவுமில்லை.

அதைத் தான் ஏசாயா தீர்க்கன் இவ்விதமாகச் சொல்கிறான். ''கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில், உன் ஆத்துமாவை திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார். நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய் ''என்கிறார் (ஏசா 58:11). மேலும் செடியாகிய கிறிஸ்துவில் நாம் கொடியாக மாறுகிறோம் (யோவா 15). நாம் தெய்வீக சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக மாற்றப்படுகிறோம். (II பேது 1:4). பிதாவாகிய தேவன் தம்முடைய தகப்பனாகவும், இயேசுக்கிறிஸ்து நமது சகோதரராகவும் மாறுகிறார்கள். (ரோம 8:17). எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவானவர் பிரதான ஆசாரியராகவும், கிறிஸ்தவர்களாகிய நாம் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும் இருக்கிறோம் (எபி 7:27, I பேதுரு 2:9)

அருமையான நண்பரே! சகோதரரே! நீங்கள் இன்னும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, கிறிஸ்தவராக மாறாமல் இருப்பீர்களானால், இன்றே ஒரு நல்ல தீர்மானம் எடுக்கும்படியாக மன்றாடுகிறேன். இந்த உலகம் கொடுக்கக் கூடாத சந்தோஷம், சமாதானம், ஆசீர்வாதம் இவைகளைப் பெற்று வாழும்படியாக ஊக்கப்படுத்துகிறேன். ஒருவேளை, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஏனோதானோ என ஜீவித்துக் கொண்டிருப்போமானால், கர்த்தருக்கு நேராக நம்முடைய உறவை சீர்படுத்துவோம். மறுமையில் அவரோடு சேர்ந்து, என்னென்றும் அவரோடு கூட வாழ்வோம்.

**E.Z.S. ராஜநாயகம்**

---

**கிறிஸ்தவனே, உனக்கு என்ன கிடைக்கும்?**

''அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான்.

அதற்கு இயேசு: மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 19:27,28

---

# கர்த்தருடைய சபையை அடையாளம் காணுதல்

ஒருவன் சுத்தமான சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, ஒரு இடத்திலுள்ள கர்த்தருடைய சபையாரோடு சேர்ந்து ஆராதித்து வரும்போது, மாறுதலின் காரணமாக வேறொரு இடத்திற்குச் செல்வது சாதாரணமாக நடக்கக் கூடியது தான். தனி ஒருவனுக்கு இப்படிப்பட்ட நிலை வரலாம். சில சந்தர்ப்பங்களில் முழு குடும்பமே செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். அந்தத் தனி நபரோ அல்லது அந்தக் குடும்பமோ, நீண்ட காலமாக சபையிலே அங்கமாக இருந்திருப்பார்களானால், உண்மையான சபையைக் கண்டுபிடிப்பதில் அவர்களுக்குக் குழப்பம் இருக்காது, ஆனால், அப்படிப்பட்டவர்கள் தங்களை புதிதாக ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தவர்களாக இருக்கும் பக்ஷத்தில், சபையைக் குறித்து தேவனுடைய வசனங்கள் என்ன போதிக்கிறது என்ற அறிவு அவர்களுக்கு எவ்வளவு இருக்கிறதோ அதைப் பொறுத்து, மெய்யான சபையை அடையாளம் காண்பதில் சில சிரமங்கள் இருக்கலாம்.

நீங்கள் வேறொரு பட்டணத்திற்கோ அல்லது இடத்திற்கோ போக முடிவு செய்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உடனடியாக உண்மையான சபையைக் கண்டுபிடிக்க விரும்புவீர்கள். அதன் மூலம் நீங்கள் கிறிஸ்தவரென்று தெரியப்படுத்தவும், அங்குள்ள பிராந்திய சபையோடு சேர்ந்து ஆராதிக்கவும், ஐக்கியம் கொள்ளவும் செய்வீர்கள். நீங்கள் பிரிந்து செல்கின்ற சபையிலிருந்து, செல்லுகின்ற இடத்திலுள்ள சபையைப்பற்றிப், போதுமான தகவல் கொடுப்பார்கள் என எதிர்பார்க்கலாம். மாறாக ஏதாவது ஒரு காரணத்தினால், உங்களுக்கு அப்படிப்பட்ட தகவல்கள் கொடுக்கப்படவில்லையென் வைத்துக் கொள்வோம். இப்பொழுது நீங்களாகவே முயன்று விசுவாசமுள்ள சகோதரர்களைக் கண்டுபிடித்தாக வேண்டும். விசுவாசத்தில் குழந்தையாய் இருக்கின்ற நிலையில், இது சில பிரச்னைகளைக் கொண்டு வரும்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உங்களுக்கு நேரும் பொழுது, கீழ்க்காணும் அடையாளங்களுள்ள ஒரு சபையை கண்டுபிடிப்பது அவசியம்.

1. அந்தச் சபை, வசனங்களின் அடிப்படையிலான ஒரு பெயரைக் கொண்டிருக்கும் அதாவது, சபையின் பெயர், கிறிஸ்-

துவின் சபை (ரோமர் 16:16), தேவனுடைய சபை (அப் 20:28) அல்லது கர்த்தருடைய சபை என்று குறிக்கும் வசனங்களின் அடிப்படையிலான மற்ற பெயரைக் கொண்டிருக்கும் வழக்கமாக, உலகெங்கிலுமுள்ள சபைகள், **''கிறிஸ்துவின் சபை''** என்று தான் அழைக்கப்படுகிறது. வசனங்கள் அங்கீகரிக்கிற வேறு பெயர்களை வைத்துக் கொள்ளலாம். ஆனால் ''கிறிஸ்துவின் சபை'' என்று ஒரே பெயரை உலகெங்கிலும் வைத்துக் கொள்கொள்வதற்குக் காரணம், அது பலவித குழப்பங்களைத் தவிர்க்கும். சபையானது, வசனங்கள் ஏற்றுக்கொள்ளும் வேறுபட்ட பெயர்களை, வித்தியாசமான இடங்களில் வைத்துக் கொள்ளுமானால், வேதவாக்கியங்களின்படியல்லாத, பல மதக் கூட்டங்கள் வித்தியாசமான பெயர்களை, வைத்து இயங்கிக் கொண்டிருக்கிறபடிபடியால், அது மேலும் குழப்பத்தையே ஏற்படுத்தும். சபையைப் பற்றி இருக்கின்ற குழப்பங்களே போதும். வசனங்களிலுள்ள பெயரைக் கொண்டுள்ள ஒரு குறிப்பிட்ட சபையானது வேறொரு இடத்தில், மற்ற பெயரில் இயங்கும் ஒரு சபையோடு ஐக்கியம் வைத்திருந்தாலும், ஒருவேளை அதுவும் வேதாகமப் பெயராக இருந்தால் கூட, ஒருவன் அதை அறிந்து கொள்ள முடியாமற் போகலாம். நான் சொல்வது யாதெனில், ஒரு சபை கர்த்தருடைய சபையாக இருக்குமானால், அது வேதத்திலுள்ள பெயரைத்தான் வைத்துக்கொள்ளும். சில வேளைகளில் கர்த்தருடைய சபையைக் கூறுபோட்டிருக்கும் பிரிவினைச் சபைகள் கூட, வேதாகமத்தின் பெயரை வைத்துக் கொள்கிறார்கள். ஆனாலும் அவைகள், இன்னும் கர்த்தருடைய சபை அல்ல. இருப்பினும், ஒரு சபையானது, வசனங்களின் அடிப்படையிலான பெயரை வைத்துக் கொள்ளாத பட்சத்தில், அது கர்த்தருடைய சபையாக இருக்க முடியாது என்பதை, நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

2. அந்தச்சபையின் அங்கத்தினர்கள், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே அழைத்துக் கொள்வார்கள் அவர்கள் ''இந்த வகையான கிறிஸ்தவர்களாகவோ'', ''அந்த வகையான கிறிஸ்தவர்களாகவோ'' இருக்க மாட்டார்கள். அவர்கள், கிறிஸ்தவர்கள் என்ற பெயரோடு, மனிதனால் உண்டாக்கப்பட்ட எந்தப் பெயரையும் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். அதாவது தங்களை கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள், புராட்டஸ்டண்டு கிறிஸ்தவர்கள், லூத்தரன் கிறிஸ்தவர்கள், இப்படி இன்னும் பல பெயர்களாலே அழைத்துக் கொள்ளமாட்டார்கள் அப், 4:12-ம். வசனத்தில் கிறிஸ்துவின் நாமத்தினால் தான் இரட்சிப்பு என்று சொல்லப்பட்டிருப்பதை அறிவோம். மேலும் அப் 11:26 லும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவரைப் பின்பற்றியவர்கள் கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

3. கர்த்தருடைய சபை, கிறிஸ்துவின்சபை, வாரத்தின் முதல்நாளில் ஆராதனைக்காக கூடிவரும். (அப் 20:7). அவர்களுடைய ஆராதனையில் கீழ்க்காணும் அம்சங்கள் அடங்கியிருக்கும். ஜெபம் (அப் 2:42) வசனத்தைப் போதித்தல் (அப் 20:7, II தீமுத் 2:15), தேவனைத்துதிக்கும் பாடல்கள் (எபே 5:19, கொலொ 3:17), ஒவ்வொரு வாரத்தின் முதல்நாளிலும் கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுதல் [அப் 20:7, மத் 26:26-28, I கொரி 11:23-59), கர்த்தருக்குக் கொடுத்தல் (I கொரி 16,1,2). இப்பொழுது,ஒருசபையானது,தேவனைத்துதித்துப்பாடும்பொழுதுஇசை கருவிகளைப் பயன்படுத்தினால் அது கர்த்தருடைய சபை அல்ல என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளலாம். அல்லது அவர்களுடைய ஆராதனை முறையில் கர்த்தருடைய பந்தி இல்லையென்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது அது கிறிஸ்துவின் சபை அல்ல என்று நீங்கள் மீண்டும் உறுதி செய்து கொள்ளலாம்.

4. கிறிஸ்துவின் சபையை கண்டுபிடிக்கும் விஷயத்தில், இன்னும் உங்களுக்கு குழப்பம் இருப்பின், உங்களை உறுதியாக்கிக்கொள்ள, சிலகேள்விகளைக் கேட்கமுடியும். இந்தச் சபையானது எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்று கேளுங்கள். ஒருவேளை அது கர்த்தருடைய சபையாக இருக்குமானால், அப். 2-ம் அதிகாரத்தில் வெளிப்படுத்தினபடி. அவர்கள் பதில் தோராயமாக கி.பி. 33 என்று இருக்கவேண்டும். எங்கே தோற்றுவிக்கப்பட்டது என்று நீங்கள் கேட்டு, எருசேலமில் என்ற பதில் வந்தால், வேதாகமத்தில் உள்ள ஒரு சபையை நெருங்கிக் கொண்டிருக்கிறீர்கள் எனப் பொருள். மறுபடியும், ஒருவன் எப்படி சபையில் அங்கமாக முடியும் என்ற கேள்வியைக் கேளுங்கள். அதற்கு சரியான பதில் கீழ்க்கண்டபடி இருக்கவேண்டும். தேவனையும், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும் விசுவாசிக்க வேண்டும். (எபி 11:6, யோவா 3:16), தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். (லூக் 13;3, அப் 17:30), கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று வாயினால் அறிக்கை பண்ணவேண்டும் (ரோம 10:10, மத் 10 32), பிறகு பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். (அப் 2:38, மாற் 16:16), ஒருவன் இவைகளை செய்யும்பொழுது, கர்த்தர் அவனை இரட்சித்து, அவருடைய சபையில் சேர்த்துக் கொள்கிறார். (அப் 2:47)

5. ஒரு பிரசங்கியார் தொங்கலான வஸ்திரந்தரித்து தன்னுடைய இடுப்பிலே கயிற்றைக் கட்டியிருந்தாலோ அல்லது பாஸ்டர், ரெவரெண்டு என அழைக்கப்பட்டாலோ அது கர்த்தருடைய சபையல்ல என்று நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

6 ஒரு ஊழியர் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நாம், அற்புத அடையாளங்கள், அந்நிய பாஷையில் பேசுதல் போன்றவை இன்றைக்கும் உண்டு என்று வாதிடுவாரானால், அது ஏதாவது ஒரு வகை பெந்தெகோஸ்தே சபை என்று நீங்கள் அறிந்து கொள்ளலாம். இறிஸ்துவின் சபை அல்ல. ஒருவன் எந்த நற்கிரியையுஞ் செய்ய தேவனுடைய வார்த்தை போதுமானதாக உள்ளது. (II தீமுத் 3: 16,17). அற்புதங்களும் பற்பல பாஷைகளில் பேசுதலும், புதிய ஏற்பாட்டின் காலத்தில் இருக்கவே செய்தது. ஆனால் தேவனுடைய குறைவற்ற வேதவாக்கியங்கள் வந்தபோது அவை நின்று போயிற்று I கொரி 13)

மேற்சொன்ன விளக்கங்கள், ஒன்று கர்த்தருடைய சபை. தானா என்று கண்டுபிடிக்கும் உங்கள் முயற்சியில் தீர்மானிக்க உதவும் சில குறிப்புகள் மட்டுமே. இந்த உலகில் அநேக சபைகள் இருப்பது நமக்குத் தெரியும். அவைகளில் சில மெய்யான சத்தியத்திற்கு நெருக்கமாகவும், சில மிக தூரமாகவும் இருக்கும். சத்தியத்திற்கு அருகாமையில் இருப்பதே போதுமானதாகாது. தேவன் ஒரு சபையை தனக்குச் சொந்தமானதுதான் என அங்கீகரிக்காத ஒரு கூட்டத்தோடு நாம் சேர்ந்து வஞ்சிக்கப்படாமலிருக்க மிகுந்த எச்சரிக்கை தேவை.

கிறிஸ்துவின் சபையராகிய நாங்கள், ''உங்களைக் காட்டிலும் நாங்கள் சிறந்தவர்கள்'' என்று சொல்லி, எங்களை நாங்களே உயர்த்திக் கொள்ள முயற்சிக்கவில்லை. மனிதர்களாகிய நாம் ஒன்று தேவனுக்குச் சொந்தமானவர்களாக இருப்போம் அல்லது சொந்த மற்றவர்களாக இருப்போம். நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்து தன்னுடைய சபையைக் கட்டுவதாக வாக்குக்கொடுத்தார் (மத் 16:18). வாக்குக் கொடுத்தபடியே, பெந்தெகோஸ்தே நாளில் அதை நிறைவேற்றினார் (அப் 2). கிறிஸ்துதான் சபைக்குத் தலைவர் (கொலோ 1;18), மாத்திரமல்ல இரட்சகராகவும் உள்ளார் (எபே 5;23). அவர் அந்தச் சபைக்காக மரித்து, தன்னுடைய இரத்தத்தால் அதை சம்பாதித்துக் கொண்டார் (அப் 20; 28). கர்த்தருக்கு ஒரே ஒரு சரீரம் அல்லது சபைதான் உண்டு (எபே 4:4, எபே 1:22,23). தன்னுடைய பெயரைத் தாங்கி இருக்கும் சபையைப் பெற்றுக் கொண்டு, அதை பரலோகத்திற்கு எடுத்துச் செல்ல அவர் திரும்பவும் ஒருநாளில் வருவார் (எபே 5. 23-27). ஆகவே நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதும், வேதாகமம் சொல்கின்ற கிறிஸ்துவின் சபையில் இருப்பதும், அந்தச் சபையாரோடு சேர்ந்து, தேவனை உண்மையோடு ஆராதிப்பதும் மிகவும் முக்கியம். அது மாத்திரமல்ல, மற்றவர்களையும் மெய்யான சத்தியத்திற்குள், சபைக்குள் அழைத்துவர பாடுபடவேண்டும்.

ஆகவே அருமை சகோதரரே! நீங்கள் வெளி இடங்களுக்குச் சென்று கர்த்தருடைய சபையை அடையாளம் காணவேண்டிய அவசியம் வந்தால் வேதாகமம் சொல்கின்ற சபையோடு, மற்ற சபைகளை ஒப்பிட்டுப் பார்த்துப் பிறகு தீர்மானிக்க கவனமாயிருங்கள். ஒரு குறிப்பிட்ட கூட்டமானது, வசனம் சொல்கின்ற கர்த்தருடைய சபைதான் என்று திட்டமும் தெளிவுமாக அறிந்த பின் நீங்கள் அவர்களோடு ஐக்கியமாகவோ, ஆராதிக்கவோ அதனுடைய வேலையில் பங்குபெறவோவேண்டும். நமக்கு சௌகரியமான இடமாக இருக்கிறதென எண்ணி, தவறான விசுவாசிகளிடம் சேர்ந்துவிடக் கூடாது. அப்படிச் சேர்வது சரியான முடிவாக இருக்காது. அப்படிப்பட்டதான ஒரு சபையை, நீங்கள் கண்டு பிடிக்க முடியாமல் போகும் பட்சத்தில் உங்களுடைய வீட்டிலேயே ஆராதித்து அங்கு தானே ஒரு சபையை ஏற்படுத்தலாம் இக்காரியத்திலும் மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க தேவன் உங்களை ஆசீர்வதித்து, உதவி புரிவாராக!

**J.C. சோட்**

---

**உங்கள் குருவானவர் யார்?**

''நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார். நீங்கள் எல்லோரும் சகோதரராயிருக்கிறீர்கள்.

பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்.

நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்''.

*மத்தேயு 23:8-10*

**பெண்கள் பகுதி**

# "நான் தான் இதற்கு காரணம்"

முன் நாட்களில், உலகத்தின் பல பிரச்சினைகளை, கண்ணோக்கும் போது, நான் இப்படியாக நினைப்பதுண்டு. "நான் பரலோகத்திற்குச் செல்லும்பொழுது, ஏவாளைப் பார்த்து, தேவன் புசிக்க வேண்டாமென்று விலக்கின கனியைப் புசித்து, கீழ்ப்படியாமற் போனதினால் எவ்வளவு தவறுகளைக் கொண்டு வந்தாய் எனக் கேட்க விரும்புவேன்". நாமும்கூட அப்படிப்பட்டதான குற்றச்சாட்டை அவள்மேல் சுமத்த எண்ணியிருப்போம். இன்றைக்கு இயற்கையோடு படுகின்ற போராட்டம், பிள்ளைப்பேற்றிலே அனுபவிக்கும் வேதனை, வயதாவதால் ஏற்படும் தொல்லைகள், மரண பயம் இவை அனைத்தும் அந்த முதல் பாவத்தின் பலன்களே.

ஆனால் இப்பொழுது, ஒரு பரிதாப உணர்வோடு தான் நான் ஏவாளைப் பார்க்கிறேன். ஆதாம் 930 ஆண்டுகள் வாழ்ந்து மரித்தான் என வேதம் சொல்கிற படியால், ஏவாளும் அநேக ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டும். தான் செய்த அந்த ஒரு தவற்றின் விளைவை, அந்த நீண்ட வாழ்வில் அனுபவித்திருப்பாள். தேவனால் உண்டாக்கப்பட்ட அழகிய பாதுகாப்பான ஏதேன் தோட்டத்தை விட்டு, தன்னோடு ஆதாமும் வெளியே தள்ளப்பட்டு, தங்களுடைய இருப்பிடத்திற்குச் செல்லும் வழிகள் மறிக்கப்பட்டு, காவலுக்கு சுடர் ஒளிப் பட்டயம் ஏந்தி நின்ற தூதர்களைப் பார்த்தபொழுது அவள் மனம் எப்படிப் பதைத்திருக்கும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போம். அவர்கள் நின்றிருந்த இடத்தைச் சுற்றிலுமிருந்த வயல்களும், காடுகளும், விளைவிப்பதற்கு ஏற்ற நிலங்களாக இல்லாமல், முற்களாலும், குருக்களாலும் நிறைந்திருக்கும். ஏவாள் இதைப் பார்த்து, தன்னுடைய இருதயத்தில் அழுது புலம்பி, "நான் தான் பூமிக்கு இப்படிச் செய்தேன்" எனச் சொல்லியிருப்பாள்.

காட்டு மிருகங்களுக்கும், கொடிய விலங்குகளுக்கும் தப்பித்தால் போதும் என்று பயந்து ஓடியபொழுது, "நான் தான் இதற்கு காரணம்" என்று உணர்ந்திருப்பாள்.

பாவத்திற்குப் பரிகாரம் தேட பலிகள் அவசியமாகிவிட்டது. ஒன்றுமறியாத, குற்றமற்ற ஆட்டுக்குட்டியை வெட்டுவதற்கு

ஆதாம் படும்பாடுகளையும், வியாகுலத்தையும் ஏவாள் கவனித்-தாள். ஆட்டுக்குட்டியின் தொண்டையிலிருந்து சிவப்பான இரத்தம் பீறிட்டு வந்தபொழுது, அவள் கண்களில் வந்த நீர்த்தாரை-கள் எப்படியிருந்திருக்கும், ''இதற்குக் காரணம் நான் தான்'' என்று அவள் ஓலமிட்டிருப்பாள்.

நோய் என்றால் என்னவென்றே தெரியாத நிலையில், முதல் முதலாக ஆதாம் நோய்வாய்ப்பட்ட நாளில், என்ன செய்வதென்று தெரியாமல், இருதயத்தில் பயந்துபோய், என்ன மன நிலையோடு அவனுடைய துயரைத் துடைத்திருப்பாள். அவன் படுக்கையருகே அன்றாடம் அமர்ந்து, அவன் வியாதி நீங்கவும், அவன் இழந்த பெலனை மீண்டும் பெறவும் பாரத்தோடு ஜெபித்தபொழுது, ''என் பிரிய ஆதாம் நோய்வாய்ப்பட நான் தான் காரணம்'' என்று மிகுந்த வேதனைப்பட்டிருப்பாள்.

காயீனும், ஆபேலும் பிறந்து, இருவரும் இளம் வாலிபர்களாக வளர்ந்தபொழுது, தன் சகோதரன் மீது காயீன்கொண்ட பொறாமை, ஏவாளைத் தொடர்ந்து வேதனைப்படுத்தியிருக்கும். பகைமையின் காரணமாக காயீன் பேசின ஒவ்வொரு வார்த்தையும், அவள் இருதயத்தைத் தைத்து, ''நான் தான் இதற்கு காரணம்'' என்று உணரச் செய்திருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக, தன் சொந்த சகோதரனின் கைகளாலே ஆபேல் கொலை செய்யப்பட்டு இரத்தம் தோய்ந்த தலையுடன், மரித்துப்போன நிலையில் அவனை வயல்வெளியில் கண்டபொழுது, அவள் இருதயம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும். உள்ளம் வெடித்துக் கதறியிருப்பாளே! தேவனே, ''நான் தான் இதற்கு காரணம்'' நான்தான் உலகத்திற்கு பாவத்தைக் கொண்டு வந்தேன் என்று எப்படி மனமுடைந்து அழுதிருப்பாள்! சாத்தானுக்குச் செவிகொடுத்த எனக்கு மரணம் வராமல், நான் நேசித்த எனது குமாரனுக்கு வந்துவிட்டதே என்று கத்தி, கதறி, புலம்பி, அழுது, புரண்டு, ''நான் தான் இதைச் செய்தேன்'' ''நான் தான் இதைச் செய்தேன்'' என்று விண்ணப்பித்திருப்பாளே!''.

இல்லை, ஏவாளை நான் பார்க்கும்பொழுது, அவளை குற்றப்படுத்தும் ஒரு வார்த்தையும் சொல்லமாட்டேன். தன்னுடைய பாவத்தின் விளைவாகத் தொடர்ந்து ஏற்பட்ட, அநேக துன்பங்களுக்காக, பல நூறு ஆண்டுகள், ஒவ்வொரு நாளும் அவள் தன்னை நொந்திருப்பாள்.

ஆனால் ஒருவேளை, ஏவாள் கீழ்ப்படியாமை என்ற தவற்றைச் செய்யாமலிருந்திருப்பாளானால், வேறு யாராவது மூலம்

பாவத்திற்கு பாதை திறக்கப்பட்டு, அதன் விளைவுகளும் ஜலப் பிரளயம் மட்டும் தொடர்ந்துதானிருக்கும். சிலர் போதிப்பதைப் போல், நாம் அந்த முதல் பாவத்தைக் குறித்த குற்ற உணர்வு டன் இருக்க வேண்டியதில்லை. நாம் எல்லோரும் அன்றாடம் பாவம் செய்து கொண்டுள்ளோம். எப்படி ஏவாள் தன்னுடைய பாவத்திற்கான விளைவுகளைச் சந்தித்தாளோ அப்படியே நம்மு டைய பாவங்களும், நம்முடைய வாழ்க்கையில் நேரிடையான முடிவான விளைவுகளை சந்திக்க வைக்கிறது.

ஆம், நம்முடைய பாவங்கள், தவறான முடிவுகள் ஆகிய இவைகளின் விளைவுகளோடு நாம் ஒவ்வொரு வருடத்தையும் கழித் துக் கொண்டுள்ளோம். நாம் நேர்மையானவர்களாக இருந்தால் நம்முடைய வாழ்க்கையின் பிரச்சினைகளுக்காகவும், நம் பிள்ளை களின் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்காகவும், வருந்தும் பொழுது ''நான் தான் இதற்கு காரணம்'' என்று, நிச்சயமாக அநேகமுறை உள்ளத்தால் ஒத்துக் கொண்டிருப்போம். ஏனெனில், நான் தேவனுடைய வழியைத் தேடவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, தேவனை நேசி என்று என் பிள்ளைகளுக்கு நான் போதிக் கவில்லை, ஏனெனில் நான் தவறான முடிவுகளை எடுத்தேன். என்னால் தான் இவை அனைத்தும் ஏற்பட்டது. ''நான் தான் இதற்குக் காரணம்''.

ஏவாளை நாம் உற்று கவனித்தால், ஏதேன் தோட்டத் தில் அந்நாளில், அவள் வேறு விதமாகச் செயல்பட்டு அவளும், மானிடம் முழுவதும் கொடுக்கவேண்டியதாகிவிட்ட பயங்கரமான விலைவைத் தவிர்த்திருக்க முடியும். நாம் நம்முடைய வாழ்க்கை யைக் கவனமாகப் பார்த்து, தவறுகளை தவிர்ப்போமா?

**Betty B. Choate** **Rachel R. Nayagam**

---

சென்ற மாத இதழ், பெண்கள் பகுதியில் (12 - ம் பக்கம்) ஆபிரகாம், வேலைக்காரியுடன் சேர்ந்ததன் மூலம் பிறந்த குழந்தையின் பெயர், இஸ்மவேல் என்பதற்குப் பதிலாக இஸ்ரவேல் என்று உள்ளது. அச்சுக்கோர்ப்பதில் நேர்ந்த பிழையை, தவிர்க்க முடியாமல் போனதற்கு வருந்து கிறோம்.

ஆசிரியர்

# கிறிஸ்தவன் ஆவது எப்படி?

''நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமை-யுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்....ஆதலால் உங்களில் ஒருவனும் கொலை பாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவாது, அந்நிய காரியங்களில் தலை-யிட்டுக் கொண்டவனாயாவது, பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படா-மலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்'' (1பேதுரு 4:14-16). ''முதல் முதல் அந்தியோக்கியாவிலே சீடர்-களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று என அப்போஸ்-தலர் நடபடி புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. (அப். 11:26). எனவே, கிறிஸ்துவின் சீடர்கள் கிறிஸ்தவர்கள் எனப்படுவர், சீடர்-கள் என்றால் கற்றுக் கொள்வோர் அல்லது பின்பற்றுவோர் எனப்பொருள்.

''இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனித-குமாரன் வந்திருக்கிறார்'', என இயேசு கூறினார். (லூக்.19:10). இயேசு என்னும் நாமத்திற்கு ''இரட்சிப்பவர்'' என்று பொருள். ''அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்'' என யோசேப்பிடம் பேசிய தேவதூதன் கூறினார். (மத் 1:21). மனித ஆத்துமாவிற்கு பாவத்தால் ஏற்படும் நித்திய விளைவுகளிலிருந்தும், மனிதனின் பாவத்திலிருந்து அவர்களை மீட்கவும் தான் கிறிஸ்து இவ்வுலகிற்கு வரவேண்டியதாயிருந்தது. ''தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.'' (யோவான் 3:16). ''நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குங்கால-மாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனு-டைய சுவிசேஷத்திற்குக் கீழ்படியாதவர்களின் முடிவு என்ன-மாயிருக்கும்? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தி-யில்லதவனும் பாவியும் எங்கே நிற்பான்? என அப்போஸ்தலர் பேதுரு பிற்காலத்தில் எழுதினார்' (1 பேதுரு 4:17-18).

ஒருவன் கிறிஸ்தவன் என்றால் அவன் இரட்சிக்கப்பட்டவன்' என்பது தெளிவு. ஒருவன் கிறிஸ்தவனாவது எப்படி என்பதை அறிந்து கொள்ளும் போது, இரட்சிக்கப்பட நான் செய்ய வேண்-

டியது என்ன? என்ற கேள்விக்கும் விடை கிடைக்கிறது. இக்கேள்விகள் சம்பந்தமாக, பல மதத்தலைவர்கள் முற்றுலும் தெளிவற்ற முறையில் நடந்து கொள்வது தான் இன்றைய உலகில் மகாப்பெரிய புதிர்களில் ஒன்றாக விளங்குகிறது. தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டதாகவும், தங்களை கிறிஸ்தவர்கள் என இன்று உரிமை கொண்டாடும் பலரிடம், அவர்களின் இருதயங்களின் உணர்ச்சிகளும் மனசாட்சியும் அவ்வாறு கூறுவதைத் தவிர, உண்மையிலேயே இரட்சிக்கப்பட்டுள்ளதை நிரூபிக்க வேறு சான்றுகள் எதுவும் அவர்களிடம் கிடையாது.

ஆனால், இக்கேள்விகளுக்கு தெளிவற்ற அல்லது சந்தேகத்திற்கிடமான பதில்களை வேதாகமம் விட்டு வைக்கவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்- முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது'' என ரோமர் 1:16ம் வசனத்தில் அப்போஸ்தலர் பவுல் எழுதினார். இரட்சிப்பின் மகத்தான திட்டத்தை இயேசு அளித்த போது, ''நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' என கூறினார் (மாற்கு 16:15,16) பெந்தெகோஸ்தே நாளிலே பேதுரு மக்களை நோக்கிக் கூறினார் ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்''(அப் 2:38), 'கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்'' என அப்போஸ்தலர் பவுல் ரோமர் 10:9ம் வசனத்தில் எழுதினார்.

மேற்கண்ட எல்லா வசனப்பகுதிகளிலிருந்தும் தெளிவாகத் தெரிவது என்ன? இரட்சிப்படைய அல்லது கிறிஸ்தவனாக மாற ஒருவன் சுவிசேஷத்தை விசுவாசிக்கவேண்டும்; நமது பாவங்களுக்காககிறிஸ்து மரித்து பின் உயிர்தெழுந்தார் என்ற நற்செய்தியை விசுவாசிக்கவேண்டும்; கிறிஸ்துவில் தனது விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும்; மனந்திரும்பவேண்டும்; நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெறவேண்டும். இது கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஒருவனைக் கொண்டு வருகிறது. ''கிருபை பெருகும் படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா?

கூடாதே, பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்'' என ரோமர் 6:1-4 வசனங்களில் அப்போஸ்தலன் பவுல் எழுதுகிறார். கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பெற்றுள்ளோம் என இங்கு அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார். அவர் மரணத்திற்குள் நாம் ஞானஸ்நானம் பெற்றுள்ளோம். ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்யப்பட்டு, புதிதான வாழ்க்கையில் நடக்க எழுகிறோம் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவில் கிடைக்கிறது (எபே 1: 3). ''இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின; எல்லாம் புதிதாயின'' (2 கொரி 5:17).

Roy V. Palmer Ph.D. — எஸ். எஸ். ராஜன்

---

**'கள்ளத் தீர்க்கதரிசிகள்' — ஜாக்கிரதை**

பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.

தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.

I யோவான் 4:1,2

# பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்

பரிசுத்த ஆவிக்குள் அல்லது பரிசுத்த ஆவியானவரால் பெறும் ஞானஸ்நானம் பற்றிய பல தவறுகள் பல காலமாகப் போதிக்கப்பட்டு வருகின்றன. அதன் விளைவாக, இரட்சிப்பில் பலத்த செயல்களையும், மாறுபாடுகளையும் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து சிலர் எதிர்பார்க்கின்றனர். சிலர் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என எண்ணிக்கொண்டு, அக்கினியால் ஞானஸ்நானம் பெற வேண்டுமென ஜெபிக்கின்றனர் (மத். 3:11). இன்னும் சிலர், தாங்கள் மறுபடியும் பிறந்ததாக நம்பிக் கொண்டு, தேவனுடைய இரண்டாம் கிருபையின் ஈவுக்காக, அதாவது பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் வழியாக தேவ வல்லமையைப் பெற தேவனை ஆவலோடு வேண்டுகின்றனர். சிலரோ, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் விளைவாக, அற்புத சுகமளிக்கவும், அந்நிய பாஷையில் பேசவும், ஆவியின் வழியாக தேவனிடமிருந்து வெளிப்படுத்தும் வரத்தைப் பெறவும் விரும்புகின்றனர். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது இதுவல்ல.

கள்ளப் போதகர்களால் மிகவும் குழப்பத்திற்குள்ளாக்கப்பட்ட இக்காரியத்தை தெளிவாகப் புரிந்து கொள்ள, ஒரு சுருக்மான சுவிசேஷ விளக்கம் நமக்கு உதவியாக இருக்கும்.

## ஞானஸ்நானம்

ஞானஸ்நானம் என்ற வார்த்தைக்கு அடக்கம் செய்தல் முழுகுதல், நீரில் அமிழ்த்துதல், ஒரு ஆடைக்கு சாயம் ஏற்றுவது போல தண்ணீரில் மூழ்க வைத்தல் என்ற பொருள்கள் உண்டு. ஒருவன் துன்பம் அல்லது பேராயத்திலிருந்து விடுபட்டு விடுவதைப் போல உருவகமாக இந்த அமிழ்த்துதல் குறிக்கிறது. ஞானஸ்நானம் கொடு என்பது வினைச்சொல், ஒரு காரியத்தை செயலாக்குவது வினைச்சொல். ஞானஸ்நானம் என்றால் முழுகுதல், அமிழ்த்துதல் அடக்கம் செய்தல், அல்லது, தண்ணீரில் முற்றிலும் மூழ்க வைத்தல் என்ற சொற்களைக் குறிக்கிறது. ''ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு..... !'' என இயேசு உருவகமாகக் கூறினார் (லூக்கா 12:50). கொல்கொதாவில் அவர் அனுபவிக்க இருந்த பயங்கரத்தை எதிர்பார்த்து, கெத்சமெனேயில் இயேசு வியாகுலப்பட்டதை இங்கு குறிப்பிடுகிறார். (லூக் 22:44). சில

அழிவுகளிலிருந்தும், பார்வோனிடமிருந்தும் தப்பித்துச்சென்ற இஸ்ரவேலர்கள், ''எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்'' (1கொரி 10:2) 'இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா?'' என கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு கேட்டார். (அப் 10;2). ஒரு நிகழ்ச்சியில் ஞானஸ்நானம் தாங்க வியலாத வியாகுலமாயிருந்தது, கெத்சமேனேயில் இயேசுவுக்கு ஏற்பட்டதைப்போல; மற்றொரு சமயத்தில் மேகமூட்டம், செங்கடல் ஆகியவற்றின் வல்லமையின் கீழ் இஸ்ரவேலர் இருந்தது ஞானஸ்நானமாகச் சொல்லப்படுகிறது. கொர்நேலியுவுக்கும் அவன் வீட்டாருக்கும் தண்ணீரில் மூழ்கி பெறுதல் ஞானஸ்நானமாக சொல்லப்பட்டிருக்கிறது. ''அவருடைய மரணத்துக்குள்ளாகவும் ஞானஸ்நானத்தாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணமாட்டோம். என பவுல் கூறினார். (ரோமர் 6:4)

## அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றனர்

கல்வாரியை எதிர்நோக்கியிருந்த இயேசு, விரைவில் தனது சீடர்களை விட்டுப் பிரிந்து போவதை அறிந்திருந்தார். அவர் போவதற்கு முன்பாக ''நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன்' அப்பொழுது என்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்'' என்றார் (யோவான் 14;16) அந்தத் தேற்றரவாளன் சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை நடத்துவார். (யோ 16:13). கிறிஸ்து உயிர்தெழுந்த பின்னர் அப்போஸ்தலர்களோடு 40 நாட்கள் தங்கி தேவனுடைய ராஜ்யத்தின் வருகைப்பற்றிய காரியங்களை குறித்து மேலுமாக அவர்களுக்கு உபதேசித்து வந்தார். ஏற்கனவே சத்தியத்தின் ஆவி அல்லது பரிசுத்த ஆவி என அடையாளம் காட்டப்பட்ட தேற்றரவாளனின் வருகை பற்றி, இப்பூமியில் தான் தங்கிய கடைசி நாளன்று மீண்டுமாக குறிப்பிட்டார் (யோ 14;26, 16:13). ''பிதாவின் வாக்குத்தத்தம்'' நிறைவேற எருசலேம் நகரில் காத்திருக்கத் தனது அப்போஸ்தலர்களிடம் இயேசு கட்டளையிட்டார். ஏனெனில் அவர்கள் ''சில நாட்களுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெற'' வேண்டியதாயிருந்தது ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்,'' வானத்தின் கீழுள்ள சகல சிருஷ்டிக்கும் இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்கும் பணியை

யை உலகம் முழுவதும் செய்ய, அந்த வல்லமை அவர்களை முற்றிலுமாக தகுதி பெறச் செய்ய வேண்டியதாயிருந்தது (அப் 1:1-8).

பத்து நாட்கள் கடந்த பின்னர், பெந்தேகோஸ்தே நாளில் எருசலேமில் தங்கியிருந்த அப்போஸ்தலர்கள் பேரில் வல்லமை இறங்கிற்று. ஆவியானவர், தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்''. (அப் 2:1-4)., (அப்போஸ்தலர் நடபடி 1:26ம் வசனத்தையும் அதைத் தொடர்ந்து அப் 2;1-4 வசனங்களையும் சேர்த்துப் படிக்கும் போது 12 அபபோஸ்தலர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியைப்பெற்ற வர்கள் என்பதை தீர்மானிக்க முடியும்). பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்ற அப்போஸ்தலர்களால் கிறிஸ்தவ மார்க்கம் தொடங்கி வைக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையான வருகை பற்றியும், கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்கிற எவனும் இரட்சிக்கப்படுவான் எனவும் கூறிய யோவேலின் தீர்க்கதரிசனம், அந்த பெந்தேகோஸ்தே நாளில் நடைபெற்ற அற்புதச் செயல்களால், நிறைவேறியதை அப்போஸ்தலன் பேதுரு அறிந்து கொண்டார். (அப் 2:16-21: (யோவான் 2: 28- 32).

**கொர்நேலியுவின் வீட்டார் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றனர்**

புற ஜாதியைச் சேர்ந்த கொர்நேலியுவின் வீட்டிலே இரண்டாம் முறையாக பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் நடைபெற்றது. (அப் 11, 11ம் அதிகாரங்களில் நேரிடையாகவும் அப். 15ம் அதிகாரத்தில் மறைமுகமாவும் கூறப்படுகிறது) இந்த வீட்டில் பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் ''வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்'' பேதுருவுடன் இருந்தவர்களும் ஒரு வேளை பேதுருவும் கூட ''பரிசுத்த ஆவியின் வரம் புற ஜாதிகள் மேலும் பொழிந்திருப்பதைக் குறித்து பிரமித்தார்கள்,'' அப் 10:44, 45). பெந்தேகோஸ்தே நாளிலே அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டதைப் போல, இந்த இடத்தில் நடைபெற்றதை பேதுரு அடையாளம் கண்டு கொண்டான். இக்காரியத்தைக் குறிப்பிட்டுப் பின்னர் பேசுகையில், ''நான் பேசத் தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார்'' என பேதுரு நினைவு கூறுகிறான். (அப். 11:15)

பரிசுத்த ஆவியானவரின் பிற நடவடிக்கைகள் பற்றி அப்போஸ்தலர் நடபடி புத்தக ஆசிரியரான லூக்கா எழுதியிருக்-

கிறார் என்ற போதிலும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பற்றிய மற்றுமோர் நிகழ்ச்சியை ஒருபோதும் அவர் அதில் குறிப்பிடவில்லை. (புதிய ஏற்பாட்டின் பிற எந்த எழுத்தாளரும் குறிப்பிடவில்லை). இரண்டே இரண்டு முறைகள் நடைபெற்ற பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பற்றி மட்டுமே பரிசுத்த வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தின் நோக்கம்

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள ஒரு குறிப்பிட்ட காரணம் இருந்தது; கொர்நேலியுவுக்கோ வேறு ஒரு காரணம். இவ்விரு நிகழ்ச்சிகளிலும் சில ஒற்றுமைகள் இருந்தன. அப்போஸ்தலர்களும், கொர்நேலியுவும் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்றார்கள், அதாவது பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அவர்கள் பேரில் இறங்கி அவருடைய வரங்கள் சிலவற்றையும் பெற்றனர், அப்போஸ்தலர்களும், கொர்நேலியுவின் வீட்டாரும் (தாங்கள் ஒரு போதும் கற்றுக் கொள்ளாத) அந்நிய பாஷையில் பேசினார்கள். ஒற்றுமைகள் இங்கு முடிகின்றன.

அப்போஸ்தலர்கள் பெற்ற ஞானஸ்நானத்திற்கும், கொர்நெலியு ஞானஸ்நானத்திற்கும் வித்தியாசமான ஒரு காரணம் இருந்தது. இயேசு கிறிஸ்துவின் பூரணமான சாட்சிகளாக அப்போஸ்தலர்களை தகுதியாக்க வேண்டி அப்போஸ்தலர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. (அப். 1:8) ஆவியானவர் "எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.... சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோ 14;26; 16:13,14). சுருங்க கூறின், தெய்வீக வெளிப்பாடுகளை வசனரீதியாக பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு அறிவித்தார். அவற்றை ஆத்தும இரட்சிப்புக்காக மனிதனுக்கு அப்போஸ்தலர்கள் வெளிப்படுத்தினார்கள். (1 கொரி. 2:9-16; எபே 9 3:4, 5). அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியானவரால் வழங்கப்பட்ட வல்லமையானவரங்களால் சத்தியத்தையும் இரட்சிப்பையும் வெளிப்படுத்திப் போதிக்கவும், அவர்களுடைய அற்புத செயல்களால் அவை தேவ செய்திகள் என உறுதிப்படுத்தவும் முடிந்தது. (மாற்கு 16:17; எபி 2:3,4).

கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பெற்ற ஞானஸ்நானத்திற்கு முற்றிலும் வேறுபட்ட ஒரு காரணம் இருந்தது. அதாவது நற்செய்தியானது புறஜாதியாருக்கும் போதிக்கப்படவேண்டும்;

அவர்களும் ''நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள்'' என்பதை யூதர்கள் திருப்தியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே. (அப் 10,11)

யோப்பா பட்டணத்திலே, பேதுரு ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கையில் தரிசனத்தைக் கண்ட நிகழ்ச்சிக்குப் பின்னர், கொர்நேலியுவின் வேலைக்காரர்களின் அழைப்பின் பேரில், யூதப்பரம்பரையில் வந்த ஆறு சாட்சிகளுடன், கொர்நேலியுவின் வீட்டுக்குச் சென்று, அவனையும் அவன் வீட்டாரையும் இரட்சிக்கத்தக்கதாக வசனங்களை எடுத்துக்கூற வேண்டியதாயிருந்தது (அப்.11:14). கொர்நேலியுவின் வீட்டில் ஆவியானவரின் வல்லமையைக் கண்ட பேதுரு, மற்றொரு சந்தர்ப்பத்தில் கூறுகிறார்: ''யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவு கூர்ந்தேன்'' (அப். 11:16).

கொர்நேலியுவின் வீட்டில் நடைபெற்ற பரிசுத்த ஆவியானவரின் செயல்கள் பெந்தெகொஸ்தே நாளிலே அப்போஸ்தலர்கள் பெற்ற அதே மாதிரியான பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பேதுருவுக்கு நினைவூட்டுகிறது. இந்த கனமான செயலைப்பற்றி, ''பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புற ஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள்'' (அப் 10:46). இச்செயலால் திருப்தி அடைந்த யூதர்கள், தங்களுக்கு மட்டுமே என ஒதுக்கப்பட்டிருந்த சபையில் புற ஜாதியாரையும் அனுமதிப்பதைத் தீர்மானிக்க எருசலேமிலே பின்னர் கூடி வந்தனர். ''இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து : அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புற ஜாதியாருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்'' (அப் 11:18).

கொர்நேலியுவின் வீட்டார் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம், அவர்களை புற ஜாதியாரின் மத்தியில் அப்போஸ்தலராக்கும் தகுதிக்காக அல்ல. புற ஜாதியாருக்கும் இரட்சிப்பின் நற்செய்தி போதிக்கப்படவேண்டும் என்பது தேவனின் திட்டம் என்பதை, அங்கு நடைபெற்ற அற்புத அடையாளங்களால் யூதர்கள் உணர்ந்து கொண்டனர் என்பதே புற ஜாதியாருக்கு கிடைத்த பலன். கிறிஸ்துவின் இராஜ்யத்தில் யூதர், புற ஜாதி என்ற பாகுபாடு இருக்கக்கூடாது (கலா 3:28).

புற ஜாதியாரின் உலகில் நற்செய்தி போதிக்கப்படுவதைத் தடுத்த யூதர்களுக்கும், புற ஜாதியாருக்கும் இடையே நிலவிய பலத்த சமூக, இன, மத வேறுபாடுகள் என்னும் தடைக்கற்களைத் தகர்த்தெறிவதே, கொர்நேலியுவின் வீட்டில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் நடைபெற்றதின் நோக்கம்.

பரிசுத்த ஆவியானவரின் ஞானேஸ்நானத்தைப் பெற்ற இந்த இரு சம்பவங்களிலும், தேவனுக்கு ஒரு நோக்கம் இருந்தது. அந்த நோக்கம் முற்றிலுமாக நிறைவேறிற்று. அப்போஸ்தலர்கள் பெற்ற பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தால், பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை அவர்கள் கற்பிக்கவும், போதிக்கவும் முடிந்தது. ஆவியானவர் அளித்த வல்லமையால் தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளை, தாங்கள் செய்த அற்புத அடையாளங்களால் உறுதி செய்ய முடிந்தது (அப் 1:8). அதன் பயனாக, அந்த சுவிசேஷம் மிகக் குறுகிய காலத்திலே ''வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு'' வந்தது (கொலோ 1:23).

கொர்நேலியுவின் ஞானஸ்நானத்தின் மூலம் புறஜாதி உலகம் மிகவும் பயனடைந்தது. அவனுடைய வீட்டார் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றது, அவர்களை இரட்சிக்க அல்ல; அல்லது சத்தியத்தை அவர்களுக்கு வெளிப்படுத்த அல்ல. புற ஜாதி உலகிற்கும், யூத உலகிற்கும் இரட்சிப்பின் நற்செய்தி போதிக்கப்படவேண்டும் என்ற தேவனின் விருப்பத்தை யூதர்கள் திருப்தியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதே அந்த ஞானஸ்நானத்தின் நோக்கமாகும்.

Max R. Miller — **மேக்ஸ் மில்லர்**

---

**நீ வாழ வேண்டுமா? ஆத்துமாவை வாழ வை**

பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.

III யோவான் 2

---

# தண்ணீர் ஞானஸ்நானம் எவ்வாறு நம்மை இரட்சிக்கிறது?

''அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது (மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்ல மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து) இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது: அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது'' (1 பேதுரு 3: 20-22)

ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது என இந்த வசனப்பகுதி நமக்குக் கூறுகிறது; அது தண்ணீர் ஞானஸ்நானத்தையே தெளிவாகக் குறிக்கிறது. ஞானஸ்நானம் நம்மை இரட்சிப்பதாக இந்த வசனப்பகுதி உருவகமாகக் குறிக்கிறது என சிலர் கூறுகின்றனர். ஆனால் அது அவ்வாறு கூறவில்லை! இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பால் ஞானஸ்நானம் நம்மை இரட்சிப்பதாகத்தான் அது கூறுகிறது! இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழாவிட்டால், ஞானஸ்நானத்தாலோ வேறு எந்த காரியத்தாலோ நாம் இரட்சிப்படைய இயலாது என்பதையே இது தெளிவாகத் தெரிவிக்கிறது. கர்த்தரால் நாம் நீதியாக எண்ணப்படுவது, கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து தேவன் எழுப்பினார் என்பதையும், ''நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்'' ''என்பதையும் நாம் விசுவாசிப்பதிலே தான் அடங்குகிறது என அப்போஸ்தலன் பவுல் எழுதினார். (ரோமபு 4:24, 25.)

## எவ்வகையில் இரட்சிக்கிறது?

ஞானஸ்நானம் எவ்வாறு இரட்சிக்கிறது? ஞானஸ்நானத்தால், தண்ணீரில் நமது பாவங்கள் கழுவப்பட்டு இரட்சிக்கப்படுகிறோம் என்ற கருத்தில் நிச்சயமாகக் கூறப்படவில்லை. ஏனெனில், கிறிஸ்தவராக இருப்போர் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டே கிறிஸ்தவரானவர்கள். (வெளி 1:5) தண்ணீரில் ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது, இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படுவதாக புதிய ஏற்பாடு போதிக்கிறது!

நோவாவின் பேழையில் எட்டு ஆத்துமாக்கள் தண்ணீரால் இரட்சிக்கப்பட்டதாக பேதுரு கூறினார். (1பேதுரு 3 :20), நோவுா

அவருடைய மனைவி, அவருடைய மூன்று மக்கள். அம்மூவரின் மனைவிமார் ஆகியோராவர்.

நிச்சயமாக இந்த எட்டுபேரும் தண்ணீரால், தண்ணீரிலிருந்து இரட்சிக்கப்படவில்லை. ஆனால் தண்ணீரால் இரட்சிக்கப்பட்டதாக தேவனுடைய வார்த்தை கூறுகிறது பேழைக்குள் தண்ணீர் புகாத காரணத்தால், தண்ணீரால் அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் (எபி 11:7). தாங்க முடியாத அக்கிரமங்களால் நிறைந்த, பாவங்களால் கெட்டுப்போன மக்களைக் கொண்ட உலகத்திலிருந்து அவர்கள் தண்ணீரால் இரட்சிக்கப்பட்டனர் (ஆதி 6:5). அந்த அக்கிரம உலகத்திற்கும், கெட்டுப்போன மக்கள் அனைவரையும் அடித்துச் செல்லப்பட்ட பின் உள்ள ஒரு புதிய உலகத்திற்கும் இடையில் ஜலப்பிரளயத்தின் தண்ணீர் வந்தது. எனவேதான் ஞானஸ்நானத்தால் நாம் அடையும் இரட்சிப்பு, தண்ணீரால் காக்கப்பட்ட அந்த எட்டு ஆத்துமாக்களைப் போல, ''அதற்கு ஒப்பனையாக'' நம்மை காக்கிறதென்று 1 பேதுரு 3:21ம் வசனத்தில் பேதுரு கூறுகிறார்.

பேழையில் தண்ணீரால் எட்டு ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டது ஒருவகை இரட்சிப்பு. 1 பேதுரு 3:21ம் வசனத்தில் கூறப்படுவது ஞானஸ்நானத்தால் நாம் இரட்சிக்கப்படும் மாற்றுவகை இரட்சிப்பாகும். Antitupos என்ற கிரேக்க வார்த்தை 1 பேதுரு 3:21ல் உபயோகிக்கப்படுகிறது. அதற்கு 'மாற்று-வகை' என பொருள்படும்.

விசுவாசத்தின் செயலான ஞானஸ்நானத்தின் மூலம் ஒருவன் பாவ உலகை விடுத்து, புதிய உலகத்திற்குள் புகும் வேளையில் கிறிஸ்து அவனை இரட்சிக்கிறார் (கலா 3:27; ரோமர் 6:3,4; 2 கொரி 5:17).

இரட்சிப்பு கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. சரியான விசுவாசம், மனந்திரும்புதல், கிறிஸ்துவை அறிக்கையிடுதல் ஆகியவற்றைத் தொடர்ந்து ஒருவன் ஞானஸ்நானம் பெறும்போது, அவன் கிறிஸ்துவுக்குள் வருகிறான். அங்கே கிறிஸ்துவின் இரத்தம் அவனை இரட்சிப்புக்குள்ளாக்குகிறது.

Basil Ouerton எஸ்.எஸ். ராஜன்

# தேவ வசனங்கள்

''வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் சீர் திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' (2 தீமோ, 3:16-17).

பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட பரிசுத்த வசனங்கள், ''கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்கக் கூடியது'' (தீமோ. 3:15). எனவே ''ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்க கடவன்'' (1 பேதுரு 4:11).

''இரட்சிப்புக்குத் தேவைப்படும் சகல காரியங்களும் பரிசுத்த சுவிசேஷத்தில் காணப்படுகின்றன. எனவே அதில் காணப்படாத எதுவும் மனித இரட்சிப்புக்குத் தேவையற்றது. பரிசுத்த வசனங்களின் பெயராலே, பழைய புதிய ஏற்பாடுகள் என்ற சட்டப் புத்தகங்களை நாம் புரிந்து கொள்கிறோம். இப்புத்தகங்களின் அதிகாரத்தைப் பற்றிய சந்தேகம் எதுவும் சபையில் ஒருபோதும் ஏற்பட்டதில்லை.

இரட்சிப்படையவும் அதைத்தொடர்ந்து விசுவாசமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழவும் நாம் செய்ய வேண்டிய காரியங்களை வேதாகமம் நமக்கு மிகத் தெளிவாகக் கூறுகிறது. (மாற்கு 16:16; யோ 3:5; அப் 2:38; தீத்து 2:11-4; 5-11 ஆகிய வசனங்களை தயது செய்து படித்துப் பார்க்கவும்).

அப்போஸ்தலர் பவுல் கூறுவதைப் பாருங்கள் :

''கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்புகிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது'' (ரோமர் 1:16).

''தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிஷேத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்'' (2 தெச. 1:7,8).

''தனக்குக் கீழ்ப்படியும் அனைவருக்கும் நித்திய இரட்சிப்பை அளிக்கவல்ல'' நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார் : ''பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை'' (மத். 7 : 21).

''என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும். நான் சுயமாகப் பேசவில்லை, நான் பேச வேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்'' (யோவான் 12:48,49).

''வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை'' (மத். 24;35).

''ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாக நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்'', என யோவான் கூறுகிறார். (வெ. 22:14).

G.F. Raines.

S. S. ராஜன்

(28—ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்'' (மத் 20:27,28).

**மன்னிப்பு :** சிலுவையின் மரணத்தைத் தழுவிய நேரத்திலும், அவரைக் கொலை செய்ய முன்னின்றவர்களுக்காக இயேசு ஜெபித்தார். ''பிதாவே, இவர்களுக்கு மன்னிபும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்''. (லூக்கா 23:24).

Jerrie Barber

ஜெர்ரி பார்பர்

# கிறிஸ்துவைப் பின்பற்றுவது எப்படி?

''கிறிஸ்துவைப் பின்பற்றி நடக்கவேண்டும் என பலர் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் இன்று அவர் இவ்வுலகில் மனித உருவில் நம்மிடையே இல்லையே? அவரைப் பின்பற்றுவது எவ்வாறு சாத்தியம்? என ஒரு கேள்வி.

ஆம், நாம் கிறிஸ்துவைப் பின்பற்றி நடக்க வேண்டியது அவசியமே. ''இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடிகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்'' (1 பேதுரு 2:21). இன்று சரீரப் பிரகாரமாக கிறிஸ்து இவ்வுலகில் இல்லாததாலும், மேற்கண்ட அறிக்கையை வெளியிடும் காலத்திலும் கிறிஸ்து சரீரத்துடன் இவ்வுலகில் வாசம் செய்யவில்லை என்பது உண்மையாக இருப்பதாலும், கிறிஸ்துவின் இவ்வுலக வாழ்க்கையை முன்னுதாரணமாக நாம் எடுத்துக்கொண்டு அவ்வாறு வாழ வேண்டியது அவசியமாகும். அவரின் உலக வாழ்க்கையைப் பற்றிய விவரங்கள் யாவும் வேதாகமத்திலே பதிவுசெய்யப்பட்டுள்ளன (யோவான் 20:30,31).

கிறிஸ்துவைப் போல நடக்க, அவர் எவ்வாறு எண்ணியிருப்பாரோ அவ்வாறு நாமும் எண்ணவேண்டும். ''கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது'' (பிலி 2:5).

நாம் நடக்க முயற்சி செய்யவேண்டிய, கிறிஸ்துவின் சில குணநலன்களைக் கீழே காண்போம்.

**அன்பு:** ''நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்''.

**தாழ்ச்சி:** ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக் கடவீர்கள்'' (யோ 13 ; 14).

**ஊழியம்:** ''உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன். அப்படியே மனித குமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல்,

(27—ம் பக்கம் பார்க்கவும்)

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi-110049
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1:00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2:15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2: 5 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004,
Sundays 1- :45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

நமது பத்திரிக்கையைப் பாராட்டி பல வாசகர்களிடமிருந்து தொடர்ந்து கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இப்பணியைச் சிறப்பாகச் செய்ய தேவனின் வல்லமையான கரங்கள் உதவி செய்வதற்காக நன்றி கூறுகிறோம்.

இப்பணியை இன்னும் சிறப்பாகச் செய்ய, வெளிவரும் கட்டுரைகள் மொழியாக்கம் இவைகளைப் பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வரவேற்கிறேன்.

நன்றி - ஆசிரியர்

Published by Church of Christ Kangayam and Printed at Jeevasakthi Press, Erode.

Editor. E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No. 27 KANGAYAM-638 701